1984 மார்ச் 6] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

அந்த மாவட்டத்தின் காவல் துறை அதிகாரி மாற்றப்பட்டதற்கும் இதற்கும் தொடர்பு இருப்பதாகச் செய்தி வரவில்லை. மறுநாள் அந்த இடத்திற்கு முன்கூட்டியே பாதுகாப்பிற்காக வராத காரணத்தால் தலைமைக் காவலர் எண் 384 என்பவர் மட்டும் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். அங்கே இருக்கின்ற டி.ஐ.ஜி. அவர்கள் சென்று அதைச் செய்திருக்கிறார்கள். எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது போன்று, விசாரணைக்குப் பின், இதிலே ஒன்றும் இல்லை என்ற நிலைமை ஏற்பட்டால், அவர் மீது நடவடிக்கை எடுத்து தண்டனை வழங்குகின்ற நிலைமை இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடுகள்). அதை நாங்கள் செய்யவில்லை. டி.ஐ.ஜி. அதைச் செய்திருக்கிறார். எனவே விசாரணைக்குப் பின் ஒன்றும் இல்லை என்றால் நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது. (குறுக்கீடுகள்.) ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் காவல் துறையினருக்காக இவ்வளவு தூரம் பேசுகிறார் என்பதில் எனக்கு ஒரு மகிழ்ச்சிதான் ஏற்படுகின்றது. ஆகவே அங்கே நடவடிக்கை எடுத்தது நாமாக இருந்தால், அவர் சொல்வது போல் சரி என்று சொல்லி முடிவு எடுக்கலாம். ஆனால் நடவடிக்கை எடுத்தது டி.ஐ.ஜி. என்பதால் பின்னர்தான் தக்க முடிவு எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத் தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகின்றது.

4 அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்தல்) தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1984.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

"தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்தல்), தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்தல்) திருத்த சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.